# பத்மனாபபுரம் நகராட்சி

## ஜுலை 2023-ம் ஆண்டுக்கான நகர் மன்ற சாதாரண கூட்டப் பொருட்கள்.

**பொருள் எண்:- 1**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள் துணை மேயர்கள் மன்றத் தலைவர்கள், மன்றத் துணை தலைவர்கள் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கும் **அரசாணை (நிலை) எண். 98** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 13/07/2023 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:- பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

மன்ற தீர்மானம் எண் -234
மன்றம் பதிவு செய்து பார்வையிடப்பட்டது

**பொருள் எண்:- 2**

பத்மனாபபுரம் நகராட்சியில் 2021-2022 நிதியாண்டிற்கு உள்ளாட்சி நிதி தணிக்கையாளர்களால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி தணிக்கை அறிக்கைகளுக்கு பதில்கள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:- பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

மன்ற தீர்மானம் எண் -235
மன்றம் பதிவு செய்து பார்வையிடப்பட்டது

**<u>பொருள் எண்:3</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான தக்கலை பேட்டை சந்தை மார்க்கெட் வெளிப்புற கடை எண்.9-க்கு 05/05/2023 அன்று மறு ஏலம் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **பெயர்** | **ஒப்பந்தம் கோரிய கடை அனுபவ உரிமைக்கான வாடகை தொகை ரூ.** |
|---|---|
| 1)திரு.ஜெ.மோகன்,ஜீவா செட்டிக்குடி தெரு, திருவிதாங்கோடு | 8500/- |
| 2)திருமதி. கே.ரம்யா, திக்கணங்கோடு | 9000/- |

மேற்படி கூடுதலாக ரூ. 9000/- க்கு கேட்டுள்ள திருமதி. கே. ரம்யா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.218/2023/அ2)

மன்ற தீர்மானம் எண் -236
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண்:4</u>**

பத்மனாபபுரம் நகராட்சி பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட உரிம இனங்களை 21/06/2023ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

| **வ.எண்.** | **உரிம இனம்** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்/முகவரி** | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1, | பேருந்து நிலைய கழிப்பறை கட்டண வசூல் உரிமம் (3 மாதத்திற்கு மட்டும்) | 1)திரு.ஜாண்றோஸ் இராமன்பறம்பு தக்கலை. | 27000/- |
| | | 2)ற்றி.ஏசுதாசன் கோவில்விளை சாரோடு தக்கலை | 30000/- |

| | | | |
|---|---|---|---|
| 2, | தக்கலை பேட்டை சந்தை இரு சக்கர வாகனம் கட்டண வசூல் உரிமம். | ற்றி.ஏசுதாசன் கோவில்விளை சாரோடு தக்கலை | 15000/- |
| 3 | டவுண்ஹால் கடை எண்.8 | எ. ஆன்றோபோஸ் வளன்தெரு வில்லுகுறி | 4500(மாத வாடகை) |
| 4, | தக்கலை பேட்டை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் கட்டப்பட்ட கடை எண். 10 | சி. செலின் ஆலிபர் பழவிளை மூலச்சல் | 4250/- |
| 5, | தக்கலை பேட்டை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் கட்டப்பட்ட கடை எண். 9 | வி. மணி மேட்டுக்கடை தக்கலை | 4000/- |
| 6, | தக்கலை பேட்டை சந்தை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் கட்டப்பட்ட கடை எண்.8 | வி. மணி மேட்டுக்கடை தக்கலை | 4000/- |

அ.கு:- வ.எண். 1க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வ.எண். 2 முதல் 6 முடிய தலா ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இவ்வினங்கள் யாவும் 21/02/2023, 10/03/2023, 24/03/2023. 12/04/2023, 26/04/2023, 10/05/2023 மற்றும் 24/05/2023 ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனவே 21/06/2023ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2-ஐ தவிர ஏனைய இனங்களை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிமம் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1250/2020/அ1)

மன்ற தீர்மானம் எண் -237
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண் 5</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பத்மனாபபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மரம் கீழே விழும் நிலையில் உள்ளதால் பொது மக்களுக்கு உயிர் அச்சுறுத்தல் நிலையில் உள்ளது. மேற்படி மரத்தினை சார் ஆட்சியர் பத்மனாபபுரம் தக்கலை அவர்களின் அனுமதி பெற்று வெட்டி அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

மன்ற தீர்மானம் எண் -238
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:6**

தக்கலை பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 6.00 செண்ட் இடத்தில் கிழக்கு எல்கையில் உள்ள முள் வேலி பழுதடைந்து சொத்திற்கு பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளது. பொது மக்கள் அத்து மீறி உள்ளே நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய வாய்ப்பு உள்ளது. எனவே அவசர அவசியமாக சுற்று சுவர் கட்டி நகராட்சி சொத்தினை பாதுகாக்கவும், அதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.50,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 626/2016/ற்றி.பி.ஐ)

மன்ற தீர்மானம் எண் -239
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:7**

பத்மனாபபுரம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள BSNL New Work அடிக்கடி பழுதடைந்து வருவதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களால் (VC) காணொலி ஆய்வுக் கூட்டம் நடத்தும் பொழுது Net Work சீராக இயங்காத நிலை ஏற்பட்டு வருகிறது. எனவே புதியதாக ஒரு Net Work இணைப்பு எடுக்கப்பட்டு அதற்கான செலவுத் தொகை ரூ. 9588/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பணியின் அவசரம் கருதி மன்ற அனுமதியினை எதிர் நோக்கி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 821/2023/இ1)
மன்ற தீர்மானம் எண் -240
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண். 8**

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிப் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு பள்ளிகள் மற்றும் நகர பகுதியினை ஒட்டியுள்ள பஞ்சாயத்து பகுதியில் அமைந்துள்ள அரசு பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5- ம் வகுப்பு வரையிலான மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்திட 01/06/2023- ல் மூன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1, | No Food Waste Coimbatore | 1.17 % குறைவு |
| 2. | Karishma, Treeding Corporation Madurai | தகுதி இல்லை (Bid) |
| 3. | SKP Enterprises | தகுதி இல்லை (Bid) |

தமிழக அரசின் திட்டமாகவுள்ளதால் பணியின் அவசரம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று No Food Waste நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 650/2023/இ1)

மன்ற தீர்மானம் எண் -241
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண். 9</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 1 முதல் 21 வரையில் அமைந்துள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் அரசு மற்றும் தனியார் நிறுவன கட்டிடங்களிலிருந்து எடுக்கப்படும் செப்டிக் டாங்க் கசடு கழிவுகளை, நகராட்சி பராமப்பில் உள்ள மருந்துக் கோட்டை உரகிடங்கின் ஒரு பகுதியில் FSTP பணிகள் முடியும் வரையில் தற்காலிகமாக கொட்டுவதற்கும் மன்ற அனுமதியும் , கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கட்டணமில்லா தொலைபேசி எண். 14420 தொடங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.106/2023/H1)

மன்ற தீர்மானம் எண் -242
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண். 10</u>**

இந்நகராட்சியில் மின் சாதன பொருட்கள் விநியோகம் செய்த வகையில் TR Traders நிறுவனம் பெயரில் 2016-2017, 2017-2018 மற்றும் 2018-2019ம் ஆண்டு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ.1,31,000/- ம் காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- நிர்வாக நலன் கருதி வைப்புத் தொகை திரும்ப வழங்க வேண்டியிருந்ததால் நகர் மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். இ1/522/2023)

மன்ற தீர்மானம் எண் -243
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண்:- 11</u>**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட பொது சுகாதார வாகனங்களுக்கு வாகன விபத்து காப்பீடு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | வாகன எண் | காலம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN75P 9346 | 13-07-2023 to 12-07-2024 | 19814.00 |
| 2 | TN75AL 3723 | 16-07-2023 to 15-07-2024 | 18985.00 |
| | | மொத்தம் | 38799.00 |

எனவே மேற்படி தொகையினை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், கம்பெனி லிமிடெட், நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 631/2018/H1)

மன்ற தீர்மானம் எண் -244
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண்:- 12</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 சரல்விளை பகுதியில் சேதமடைந்துள்ள மழைநீர் வடிகால் சீரமைப்பு பணி செய்ய 29/03/2023 ல் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | ப□ ியின் பெயர் | ம□ிப்பீடு ரூ. இலட்சம் | ஒப்பந்□ க் காரரின் பெயர் | ஒப்பந்□ ப் புள்ளி ச□ விகி□ ம் |
|---|---|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 4 சரல்விளை பகுதியில் மழைநீர் வடிகால் பணி செய்தல். | 3.60 | திரு.ஸ்டீபன் | 0.00% குறைவு |
| | | | திரு. சி.கே.ராகேஷ் | 0.08% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.08% குறைவாக பணி செய்ய திரு.சி. ராகேஷ் ஒப்பந்தக்காரர் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்

கொள்ளப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

அ.கு:- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.82/2023/இ1)

மன்ற தீர்மானம் எண் -245
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் எண்:- 13</u>**

பத்மனாபபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவிளக்குகளில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுகிறது. மேற்படி பழுதுகளால் தெருவிளக்கில் உள்ள மின் உதிரி பாகங்கள் பழுதடைவதால் அதனை மாற்றி புதிய மின் உதிரி பாகங்கள் ஓராண்டிற்கு ஆண்டிற்கு வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்ற தீர்மானம் எண் -246
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>பொருள் எண்:- 14</u>**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட சந்தையில் உள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பத்மனாபபுரம் அரண்மனையில் உள்ள நீர் தேக்க தொட்டியில் இருந்து விநியோகம் செய்யும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாயில் ஏற்படும் உடைப்பு மற்றும் பழுதுகளை 2023-2024 ஆண்டிற்கு (ZONE-1)ல் சரி செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.
மன்ற தீர்மானம் எண் -247
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:- 15**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட புலியூர்குறிச்சி மேல் நிலை நீர்தேக்க தொட்டி , அரசு மருத்துவமனை அருகில் உள்ள நீர் தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யும் இடப்பக்கம் உள்ள மினி பவர் பம்பு மற்றும் பி.வி.சி. டேங்கில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யவும் (ZONE-2)ல் உள்ள பழுதுகளை 2023-2024-ம் ஆண்டுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.
மன்ற தீர்மானம் எண் -248
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:- 16**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட சந்தையில் உள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டி பத்மனாபபுரம் பேலஸ் மேல் நிலை நீர்தேக்க தொட்டி ஆகிய இடங்களில் உள்ள மினி பவர் பம்பு மற்றும் பி.வி.சி டேங்கில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யவும் (ZONE-1) ல் உள்ள பழுதுகளை 2023-2024ம் ஆண்டுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 5,00,000/-;க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.
மன்ற தீர்மானம் எண் -249
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:- 17**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட புலியூர்குறிச்சி மேல் நிலை நீர்தேக்க தொட்டி , அரசு மருத்துவமனை அருகில் உள்ள நீர் தேக்க தொட்டியில் உள்ள பகிர்மான குழாயில் ஏற்படும் கசிவினை சீர் செய்யவும் (ZONE-2)ல் 2023-2024-ம் ஆண்டுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அனுமதிக்கலாம்.

மன்ற தீர்மானம் எண் -250

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:- 18**

இந்நகராட்சியில் ஒப்பந்தகாரராக திட்டப் பணிகள் மேற்கொண்ட கீழ்கண்டவாறுவுள்ள ஒப்பந்தக்காரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகையினை வழங்கிட கேட்டுள்ளார்கள்.

1)திரு.ஜாண் ஜஸ்டஸ்
2)திரு.ராமதாஸ்
3)திரு.ஜெகஸ்லால்
4)திரு.சுந்தர்ராஜ்

மேற்படி ஒப்பந்ததாரர்களின் வைப்பு தொகை காலங்கடந்த தொகையாகவுள்ளதால் தணிக்கை தடைகளுக்குட்பட்டு தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்ற தீர்மானம் எண் -251

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**பொருள் எண்:- 19**

பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பேட்டை சந்தையில் உள்ள கழிப்பறையை கட்டண கழிப்பறையாக மாற்றி பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:-அனுமதிக்கலாம்.

மன்ற தீர்மானம் எண் -252

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

நகர் மன்றத் தலைவர்,
பத்மனாபபுரம் நகராட்சி.